FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8069065

1. District : நாகப்பட்டினம் PS: அழுனி காவல் நிலையம் Year: 2025 FIR No.: 2/2025 Date: 10.07.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS சுருக்கம் Sections பிரிவுகள்: 106 BNSS மற்றும்

(ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 10.07.2025 நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 11.50hrs. Time to : 18.00hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 10.07.2025 Time : 22.00hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 10.07.2025 Time : 22.00hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 Km வடக்கு வட்டாரப் போக்கு - பரத்தி திலையம், நாகப்பட்டினம்

Beat Number :
முறைக் காவல் எண்

(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. N. ரகுராமன் (b) Father's/ Husband's Name : நாடிமுத்து
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 47/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : வியாபாரிகள் / தொழில் தற்காலிக மாவட்ட நிர்வாகத்தின் ஒப்பந்தகார ஊழியர்

(g) Address : வெரிநீர் இளைஞர் மன்றம், மாவட்ட நிர்வாகம் நாகப்பட்டினம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. P. முருகானந்தம், அலுவலர்/2025, தாலுகா. வன்னியாகி. வட்டாரப் போக்குவரத்து அலுவலர்/. நாகப்பட்டினம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாகனம் தாமதம் -

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது இன்று 10.07.2025 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் க.இமயவரம்பன் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.ந.சக்கரவர்த்தி, வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் /தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், ந.சக்கரவர்த்தி, வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம், தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர், துணைக் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, நாகப்பட்டினம் மாவட்ட பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் மற்றும் தற்காலிக நாகப்பட்டினம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 10.07.2025 ஆம் தேதி 11.50 மணி முதல் 18.00 மணி வரை நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, திரு.P.முருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலரது அறையில் அவரது இருக்கைக்கு எதிரே வடகிழக்கு பக்கத்தில் இருந்த மினிபஸ் பர்மிட் பதிவேடுகள் இருந்த அட்டை பெட்டியில்

(சோதனை செய்யப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ....., காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Tahsildar (DM)
Temporary, ICO, Nagai

10/7/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.07.2025.

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....
சார்பு நீதிமன்ற வளாகம்
வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-

இருந்து நான்கு பண்டில்களாக சுருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.50,200/- (13500 + 13200 + 13000 + 10500 = 50200) மற்றும் அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள கண்காணிப்பாளர் அமர்ந்திருந்த ஹாலுக்கு வடக்குப்பக்கம் பழைய பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்த அறையில் பதிவேடுகளுக்கு இடையில் இருந்து இரண்டு கற்றைகளாக கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,09,300/- (50000 + 59300 = 109300) அத்துடன் வசூல் செய்த பணம் குறித்த வகைபாட்டுடன் தினசரி கையூட்டு தொகை குறிப்புகள் எழுதிய சிறிய நோட்டு ஆகியவை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.முருகானந்தம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் யாரும் சரியான முகாந்திரம் கூறவில்லை என்பதால், அந்த சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று, லஞ்ச ஒழிப்பு துறையினரை கண்டதும் மறைத்து வைக்கப்பட்ட கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மொத்த தொகை ரூ.1,59,500/- மற்றும் பதிவேடுகள் அறையில் பணத்துடன் இருந்த எழுதப்பட்ட சிறிய பாக்கெட் நோட்டு ஆகியவை திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கண்டபடி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சிபள்ளிகளின் உரிமையாளர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு RC renewal, Licence, Minibus permit மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையிலும், வட்டார போக்குவரத்து அலுவலக பணம் கையிருப்பு பதிவேடு மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக வெளிநபர் அலுவலத்திற்கு வருகைபுரியும் விபரப்பதிவேடு ஆகியவற்றில் அலுவலர்கள் மற்றும் வெளிநபர்கள் வருகை மற்றும் கையிருப்பு பணம் குறித்த பதிவு மேற்கொள்ளததாலும், மேற்கண்ட விபரப்படியான கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.1,59,500/-, குறிப்புகள் எழுதப்பட்ட சிறிய நோட்டு மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக 5 பதிவேடுகள் மற்றும் திரு.P.முருகானந்தம், வயது 57/2025, த/பெ.பொன்னுசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் என்பவரது வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி திரு.P.முருகானந்தம், வயது 57/2025, த/பெ.பொன்னுசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் என்பவரின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) ந.சக்கரவர்த்தி 10.07.25 (ந.சக்கரவர்த்தி), வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம், தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம், நாள் - 10.07.2025 திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும்

நடவடிக்கைகள் இன்று 10.07.2025 ஆம் தேதி காலை சுமார் 11.50 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திரு.N.சக்கரவர்த்தி, த/பெ.நாடிமுத்து, வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் , தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். திரு.M.குணசேகரன், த/பெ. முத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திருக.இமயவரம்பன் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து நாகப்பட்டினம் மாவட்ட தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு.N.சக்கரவர்த்தி அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்கு பால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகானந்தம் மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சிபள்ளிகளின் உரிமையாளர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு RC renewal, Licence, Minibus permit மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 10.07.2025 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தகவல் தெரிவித்தன் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் உத்தரவு ந.க.எண்.2954569/2025/அ1, நாள்.10.07.2025ன் படி தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்ததன் பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று காலை 11.30 ம்ணிக்கு சென்றபோது, அங்கு தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களும் அலுவலகத்திற்கு வந்திருந்தார். நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளரிடம் விவரம் தெரிவித்தபிறகு, ஆய்வுக்குழு ஆய்வாளரிடமும் மற்றும் என்னிடமும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சிபள்ளிகளின் உரிமையாளர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு RC renewal, Licence, Minibus permit மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை தெரிவித்தும், நாகப்பட்டினம் வட்டார

போக்குவரத்து அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்யவேண்டியதன் அவசியத்தையும் கூறியதன் அடிப்படையில், அங்கிருந்து நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.இமயவரம்பன் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 10.07.2025 ஆம் தேதி 11.40 மணியளவில் புறப்பட்டு, நாகப்பட்டினம் வாட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 11.50 மணியளவில் வந்து, நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.முருகானந்தம் மற்றும் அலுவலர்களிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகமானது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் தெற்கு முகமாக அமைந்துள்ளது. இந்த அலுவலகத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் காலிஇடங்கள் உள்ளது. இந்த அலுவலகத்தின் முன்புறம் ஒரு போர்டிகோவும், இந்த அலுவலகத்தின் நுழைவு வாயிலை அடுத்து ஒரு பெரிய ஹாலும், அந்த ஹாலுக்கு வடக்கே வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும், அந்த ஹாலுக்கு மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய PA to RTO அவர்களது அறையும், அதன் எதிர்புறம் கண்காணிப்பாளர் இருக்கையும், அதனை அடுத்து ஒரு ஹாலும் அமைந்துள்ளது. அந்த ஹாலின் மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் இருக்கை வடக்குபார்த்தும் உள்ளது, அந்த ஹாலின் வடக்கே ஒரு மூன்றாவது ஹாலும் உள்ளது. அதில் கிழக்கு பக்கம் அடுக்கி வைக்கப்பட்ட பதிவேடுகளும், அதனையடுத்து கழிவறைகளும் உள்ளது. மேற்படி மெயின் ஹாலின் கிழக்கே மையத்தில் மாடிபடிக்கட்டுகளும், அதனையடுத்து கண்ணாடி தடுப்பு உள்ளது, அதனை அடுத்து ஒரு சிறிய ஹாலும், அதனை அடுத்து கிழக்கே கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய அலுவலர்கள் இருக்கைகளுடன் கூடிய அறையும், மேற்படி அறைக்கு வடக்குபக்கம் தனியாக Smart Card அறையும், அதற்கு கிழக்கே பார்வையாளர்கள் அமரும் இடமுமாக வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் படிக்கட்டின் எதிர்புறம் பதிவறையும், மேற்குபக்கம் ஒரு ஹாலும், அந்த ஹாலினை அடுத்து பதிவேடுகள் வைக்கப்பட்டுள்ள அறைகள் உள்ளது. தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தின் உள்ளே நுழைந்த போது, நுழைவு வாயிலில் நின்று

கொண்டிருந்தவர்களை அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரித்து, சோதனை செய்து அனுப்பப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் 1) திரு.Pமுருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலர், (2) திரு.G.Rபாலாஜி, கண்காணிப்பாளர், (3) திரு.N.சிங்காரவேலு, உதவியாளர், (4) செல்வி. M. ஜெயஸ்ரீ, கணக்கர், (5) செல்வி. G.சத்தியா, உதவியாளர், (6) செல்வி. E.வீனா, உதவியாளர், (7) செல்வி. R.ரம்யா, உதவியாளர், (8) திருமதி.R.சுமதி, இளநிலை உதவியாளர், (9) செல்வி. V.சத்யா, இளநிலை உதவியாளர், (10) திரு.T.செந்தில்குமார், இளநிலை உதவியாளர், (11) திரு.Sகலியபெருமான், அலுவலக உதவியாளர், (12) திரு.S.Rரவி, ஓட்டுனர் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து, சோதனை செய்தும், அலுவலகத்தையும் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியவர்களிடம் அந்த தொகை அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்றைய தினம் மோட்டார் வாகன ஆய்வாளர் திருகபிரபு என்பவர் அலுவலகத்தில் இல்லை, தற்செயல் விடுப்பில் உள்ளார் என்ற விவரத்தினை வட்டார போக்குவரத்து அலுவலர் தெரிவித்தார். மேலும் கீழ்கண்டவாறு அலுவலகத்தின் அறைகளில் இருந்து சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலும், மேலும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலருக்காகவும் மற்றும் அலுவலர்களுக்காகவும், புரோக்கர் மூலமாகவோ அல்லது நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்கள் மூலமாகவோ, RC renewal, Licence, Mini-Bus permit மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தம் ரூபாய். 1,59,500/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்	கைப்பற்றப்பட்ட ரூபாய்
1.	திரு.Pமுருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலர்	600	
2,	திரு.Pமுருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலர் அவரது அறையில் அட்டை பெட்டியல் இருந்து கைப்பற்றப்பட்ட பணம்	00	50200
3.	திரு.G.Rபாலாஜி, கண்காணிப்பாளர்,	590	
4.	திரு.N.சிங்காரவேலு, உதவியாளர்,	760	
5,	செல்வி. M. ஜெயஸ்ரீ, கணக்கர்,	250	
6,	செல்வி. G.சத்யா, உதவியாளர்,	350	
7.	செல்வி. E.வீனா, உதவியாளர்,	300	
8.	செல்வி. R.ரம்யா, உதவியாளர்,	300	
9.	திருமதி.R.சுமதி, இளநிலை உதவியாளர்,	800	

10.	செல்வி. V.சத்யா, இளநிலை உதவியாளர்,	140	
11.	திரு.T.செந்தில்குமார், இளநிலை உதவியாளர்,	600	
12.	திரு.S.கலியபெருமாள், அலுவலக உதவியாளர்,	160	
13.	திரு.S.R.ரவி, ஓட்டுனர்	1200	
14.	பழைய பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்த அறையில் பதிவேடுகளுக்கு இடையில் இருந்த மொத்த பணம்	00	109300
		6050	159500

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததாலும், அவர்கள் வைத்திருந்த பணம் பற்றி பணம் கையிருப்பு பதிவேடு-2025ன்படி சரியாக இருந்ததாலும் அந்த பணம் ரூபாய் 6050/- அவரவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் வெளியில் இருந்த அனைத்து நபர்களையும் தனித்தனியாக விசாரணை செய்து அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டார்கள். (1) திரு.P.முருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலர் அவரது அறையில் அவரது இருக்கைக்கு எதிரே வடகிழக்கு பக்கத்தில் இருந்த மினிபஸ் பர்மிட் பதிவேடுகள் இருந்த அட்டை பெட்டியில் இருந்து நான்கு பண்டில்களாக சுருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.50,200/- (13500 + 13200 + 13000 + 10500 = 50200) மற்றும் (2) அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள கண்காணிப்பாளர் அமர்ந்திருந்த ஹாலுக்கு வடக்குப்பக்கம் பழைய பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்த அறையில் பதிவேடுகளுக்கு இடையில் இருந்து ஒரு சிறிய நோட்டில் தொகைகள் எழுதப்பட்ட இருண்டு கற்றைகளாக கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,09,300/- (50000 + 59300 = 109300) பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.முருகானந்தம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் யாரும் சரியான முகாந்திரம் கூறவில்லை என்பதாலும், அந்த சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று, லஞ்ச ஒழிப்பு துறையினரை கண்டதும் மறைத்து வைக்கப்பட்ட கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மொத்த தொகை ரூ.1,59,500/- மற்றும் பதிவேடுகள் அறையில் பணத்துடன் இருந்த எழுதப்பட்ட சிறய பாக்கெட் நோட்டு ஆகியவை திடீர் ஆய்வில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின் போது நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக பதிவரை எழுத்தர் பொறுப்பு இளநிலை உதவியாளர் திரு.T.செந்தில்குமார், அரசு பேரூந்துகள் தொடர்பான பதிவேடுகளை பராமரிக்கும் உதவியாளர் திரு.நசிங்காரவேல் ஆகியோரிடம் மேற்படி சந்தேகத்திற்கு இடமாக இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,09,300/- இருந்த பதிவேடுகள் அறையில், பதிவேடுகள் பராமரிக்கும் பணி மற்றும் பதிவேடுகள் சம்மந்தமாக விசாரணை செய்ததில் மேற்படி பதிவேடுகள் முடிவுற்ற பதிவேடுகள் என்றும், அந்த பதிவேடுகள் அனைத்தும் பயன்பாட்டில் இல்லை என்றும், அந்த அறை அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள்

அனைவரும் அமர்ந்து உணவு அருந்தும் இடம் என்றும், பதிவேடுகள் வைக்கும் அறை தனியாக அலுவலகத்தின் மாடியில் உள்ளது என்றும் தெரிவித்தனர். மேலும் அலுவலகத்தில் இருந்து வருகை பதிவேடுகள் தொடர்பான ஆவணங்களை ஆஜர் படுத்த கண்காணிப்பாளரிடம் தெரிவித்ததன் அடிப்படையில் (1) வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு 2025, (2) வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேட்டின் குறிப்பு விவர பதிவேடு 2025, (3) வட்டார போக்குவரத்து அலுவலக தாமத வருகை பதிவேடு 2025, (4) வட்டார போக்குவரத்து அலுவலக நடமாட்ட பதிவேடு 2025, (5) வட்டார போக்குவரத்து அலுவலக பணம் கையிருப்பு பதிவேடு 2025 ஆகியவை திடீர் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் முடிவில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.முருகானந்தம் அவர்களை தற்காலிக மாவட்ட ஆய்வுக்-குழு அலுவலர் அவர்கள் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 10.07.2025 ஆம் தேதி இரவு 18.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 10.07.2025 தேதி இரவு 22.00 மணியளவில் மேற்கண்ட புகாரைப்பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரக அறிவுரைப்படி, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2025 சபி 106 BNSS & 7 of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018 இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

10/7/25

(க.இமயவரம்பன்)
துணைக் காவல் கண்காணிப்பாளர்.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர், எதிரி திரு.P.முருகானந்தம், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் மாவட்டம் மற்றும் அமர்வுகள் நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

10/7/25

(க.இமயவரம்பன்)
துணைக் காவல் கண்காணிப்பாளர்.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.